# வேதாகமத்தின் மாபெரும் உபதேசங்கள்

*வேதாகமத்தில் போதிக்கப்படும் மாபெரும் உபதேசங்கள் மனிதரை விட உயர்வான/மேலான மூல ஆதாரமொன்று அந்த உபதேசங்களுக்கு இருந்ததைச் சுட்டிக்காட்டுகின்றன.*

## தேவனைப் பற்றிய உபதேசம்

*வேதாகமத்தில் விவரிக்கப்படும் தெய்வீகம் என்பது உயர் பண்புகள் எல்லாவற்றையும் மகிமைப்படுத்தி உயர்த்துகின்றது. வேதாகமத்தின் தேவனானவர், ஒரு உள்ளூர் இனக்குழுவின் அல்லது சிறு நகரின் தெய்வமாயிருப்பதற்குப் பதில், வானங்களையும் பூமியையும் படைத்தவராய் இருக்கின்றார். வேதாகமத்தின் தேவனானவர் - "காணாமலும், கேளாமலும் உணராமலும் இருக்கிற" (தானி. 5:23) - வெண்கலம், இரும்பு, மரம் அல்லது கல்லால் ஆனவராயிராமல், எல்லாம் அறிந்த ஆவியாயிருக்கின்றார். புறசமயத்தெய்வங்களுக்குக் கற்பித்துக் கூறப்படும் விரோதம், பழிவாங்குதல், சிற்றின்பப் பிரியம் அல்லது வேறு எந்த ஒழுக்கவீனமான குணங்கள் எவற்றிற்கும் இறங்கி வந்து தேவன் தம்மை ஒருபொழுதும் குறைத்துக் கொள்வதில்லை. மாறாக, வேதாகமத்தின் தேவன் அக்கிரமம் அற்றவராயிருக்கின்றார்; அவர் "நியாயக் கேடில்லாத சத்தியமுள்ள தேவன்; அவர் நீதியும் செம்மையுமானவர்" (உபா. 32:4). தேவன் அன்பே உருவானவர். அவர் தண்டிக்க நேரிடும் போது, அது எப்பொழுதுமே அவருக்குத் துயர் தரும் மூலாதாரமாக இருக்கின்றது. மனிதரின் நல்வாழ்வின்மேல் ஆர்வம் கொண்ட ஒரு இருதயத்துடன் அவர் மனித குலம் முழுவதற்கும் மாபெரும் இரக்கம் கொண்ட தகப்பனாக இருக்கின்றார்.*

*ஒவ்வொரு காலத்திலும் எல்லா நாடுகளிலும் மக்கள் தங்கள் சுய இஷ்டப்படி தெய்வங்களை (உண்டாக்கி) வணங்கிக் கொண்டிருக்கின்றார்கள். இருந்தாலும் தேவனில் காணப்படும் உயர்வகைப் பண்புகளுடன் அம்மக்களின் தெய்வங்கள் ஒருபொழுதும் சித்தரிக்கப்பட்டிருந்ததில்லை. மனிதரால் உண்டாக்கப்பட்ட*

தேவர்களுக்கும், வேதாகமத்தின் தேவனுக்கும் இடையில் உள்ள வேறுபாடுகள், இப்படிப்பட்ட மேலான தேவன் மனிதரில் இருந்து தோன்றியிருக்க மாட்டார் என்பதற்குப் பலத்த சுட்டிக்காட்டுதலாய் இருக்கின்றது. வேதாகம எழுத்தாளர்கள் தாங்கள் தோற்றுவிக்கக் கூடாதிருந்த தேவன் ஒருவரைப் பற்றிய கருத்துக் கொண்டிருந்தார் களென்றால், அவர்கள் மனிதரைக் காட்டிலும் மேலான ஒருவரின் உதவியைப் பெற்றார்கள் என்பது தெளிவானதாகும்.

## மனிதனைப் பற்றிய உபதேசம்

தேவனைப் பற்றிய வேதாகம உபதேசமானது உயர்பண்புகள் எல்லாவற்றையும் உயர்த்துவது போலவே, மனிதனைப் பற்றிய வேதாகம உபதேசமானது அவனிடத்தில் குறைபாடுகள் இருந்த போதிலும் மனிதனைக் கனப்படுத்துகின்றது. மனிதனுடைய இயல்பு பற்றிய வேதாகமத்தின் சித்தரிப்பானது, கொடுக்கப்பட்டவற்றிலேயே மிக உயர்வானதாயிருப்பதுடன், மிக மிகச் சரியானதாகவும் இருக்கின்றது.

**தேவசாயலில், இருப்பினும் பாவம் நிறைந்து**

மிருகப் படைப்புகளுக்கு மேலாக மனிதன் வேதாகமத்தில் உயர்த்தப் படுகின்றான். அவன் தேவ சாயலினால் கனப்படுத்தப்படுகின்றான்; அவன் தூதர்களைக் காட்டிலும் சற்று சிறியவனாகத் தரப்படுத்தப்பட்டான். இருப்பினும், அதே வேதாகமம் தேவனுடைய பார்வையில் மனிதனை ஒரு சிறு வெட்டுக்கிளியாக மற்றும் அதிக அளவில் பாவம் நிறைந்தவனாகவும் முன் வைக்கின்றது. இந்த இரட்டைக் கண்ணோட்டமானது மனிதன் தன்னுடைய முக்கியத்துவத்தையும் மற்றும் தன்னுடைய தீட்டான தன்மையையும் அறியும்படி அவனை அனுமதிக்கின்றது. இது மனிதனுக்குள் தாழ்மையான அல்லது தற்பெருமையான உணர்வு வளர்வதைத் தடை செய்கின்றது. மனிதன் அன்புகூரப்பட்டு, பாராட்டப்பட்டான் என்று காண்பிக்கும் வேதாகமம், அதே வேளையில் அவன் சுத்தம் மற்றும் பரிசுத்தம் ஆகியவற்றில் குறைவுபட்டவனாய் இருப்பதையும் அவனுக்குக் காட்டுகின்றது. மனித இனத்தின் இந்த இருபுறத் தோற்றப் பண்பானது இயேசுவின் மரணத்தில் குறிப்பாக விளக்கமாகின்றது: மதிப்பிட முடியாத தகுதியுள்ளவர்களும் மற்றும் கணக்கிட முடியாத குற்றங்களை யுடையவர்களும் மட்டுமே சிலுவையில் அறையப்படுதலுக்கு அழைக்கப்பட முடியும்.

**சுயாதீனமாய் ஒழுக்கத்தை தேர்ந்தெடுத்தல்**

மனிதனை ஒரு இயந்திர மனிதனாக, முழுவதும் இயந்திர அமைப்புகளைத் தீர்மானித்து தேவன் படைத்திருக்க முடியும் என்றாலும், தேவன் தாம் படைத்த மனிதன் நன்மை தீமையைப் பொருத்தமட்டில் முற்றிலும் சுயாதீனமுள்ளவனாக சாத்தானை அல்லது தேவனைச்

சேவிப்பதைத் தானே தேர்ந்தெடுப்பவனாக இருக்க வேண்டும் என்பதே அவரது தீர்மானமாயிருந்தது. முன் தீர்மானம் அல்லது விதிவசம் என்ற கொள்கைகளுக்கு மாறாக, மனிதன் தனது ஒழுக்க நடக்கைகளுக்கு தானே பொறுப்புடையவன் என்று வேதாகமம் ஏற்படுத்தி வைத்து, அவன் தனது அடைவிடத்தைத் தானே முடிவு செய்து கொள்ளும்படி அனுமதிக்கின்றது.

**மனித சமத்துவம்**

வேதாகமத்தின்படி பேசுகையில், இனமேன்மை என்பது இல்லாத ஒன்றாகும், ஆனால் ஒரு மக்கள் குழுவினர் தாங்கள் மேன்மையானவர்கள் என்று உரிமை பாராட்டுவது பொதுவாகக் காணப்படுகின்றது. பல இனங்களுடன் யூதர்களும் இனமேன்மை என்ற தவறான கருத்துடைய குற்றவாளிகளாக இருந்தார்கள். தேவன் இவ்வுலகிற்கு மேசியாவைக் கொண்டு வருவதற்காக யூத மக்களைத் தேர்ந்தெடுத்தார், ஆனாலும் யூதர்கள் மற்ற இனங்களைக் காட்டிலும் மேன்மையானவர்கள் என்று அவர் அர்த்தப்படுத்தவில்லை. அதைப் பொறுத்தமட்டில் தேவன், மற்ற இனங்களைக் காட்டிலும் தாங்கள் சிறந்தவர்கள் என்று யூதர்கள் கருதிக் கொள்ளக் கூடாது என்று குறிப்பாக எச்சரிக்கை செய்திருந்தார். இருந்த போதிலும் அவர்கள் சுய மேன்மை பாராட்டுதல் மேலோங்கியிருக்க அனு மதித்தார்கள்.

அது போலவே கிரேக்கர்கள் மற்ற மக்களைக் காட்டு மிராண்டிகள் என்று அட்டவணைப்படுத்தினார்கள், அதே வழிமுறையில் தாழ்ந்த நிலையில் இருந்த மக்களைக் கீழ்ப்படுத்தத் தவிர்க்க முடியாத ஒரு கடும் முயற்சியானது ரோமர்களை முதலாளிகளாக்கும்/எஜமானர்களாக்கும் என்று ரோமர்கள் நம்பினார்கள். அவர்களைப் பொறுத்தளவில், ரோமரல்லாதவர்கள் அனைவரும் வெற்றி கொள்ளப்பட வேண்டிய எதிரிகளாக மட்டுமே இருந்தார்கள்.

இன விரோதம் என்பது தவிர்க்க முடியாததென்று மனிதனால் கருதப்பட்டுள்ளது. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த செல்ஸஸ் என்ற சூழ்ச்சி மற்றும் படிப்பறிவு மிக்க தேவபக்தியற்றவன், கிறிஸ்தவம் என்பது எல்லா இனங்களுக்கும் ஒரே மதம் உள்ளதென்று கண்ணோக்கமிடுவதால், அது வெற்றி பெறும் நம்பிக்கையைப் பெற்றிருக்க முடியாதென்று வாதிட்டான்.

ஆரிய இனத்தின் பிரதிநிதிகள் என்ற வகையில் ஜெர்மானியர்கள் ஆயிரம் வருடங்களுக்கு இவ்வுலகை ஆளுவார்கள் என்று அடால்ஃ ஹிட்லர் தம்மைப் பின்பற்றுபவர்கள் நம்பும்படி செய்தார். இதைக் காட்டிலும் சற்றும் வலுக்குறையாத வழியில், ஜப்பானியர்கள், தாங்களே மனுக் குலத்தின் உதய சூரியன் என்று 1940களில் நம்பினார்கள்.

இருப்பினும், தேவன் எல்லா இனத்தையும் ஒன்றாகவே/ ஒன்றாயிருப்பதாகவே ஏற்படுத்தினார் என்று வேதாகமம் சித்தரிக்கின்றது. எல்லா மனிதர்களுக்காகவும் இயேசு மரித்தார் என்று அது போதிக்கின்றது. “தேவன் பட்சபாதமுள்ளவரல்ல” (அப். 10:34) என்ற சத்தியமானது இதைப் பற்றிய நீதியின் அடையாளமொன்றைப் பெற்றுள்ளது. மனிதர்கள் உலகளா

*விய சகோதரத்துவத்தை நடைமுறைப் படுத்தியிருக்கவில்லை, ஆனால் அறிவுக் கூர்மையுள்ள வகையில் இது மறுக்கப்பட முடியாது. யூதர்கள் இயல்பாகவே இந்த உபதேசத்தைத் தோற்றுவித்திருக்கவில்லையாதலால் வேதாகமமானது - அது முற்றிலும் மனிதனில் இருந்து உண்டாயிருந்தால் - இந்தக் கருத்தை எப்படிப் பெற்றிருக்கும் என்று ஒருவர் வியப் படைகின்றார்.*

## கடமையைப் பற்றிய உபதேசம்

*மனிதனின் இயல்பைப் பற்றிய வேதாகமப் போதனையானது சாதாரண சிந்தனையைப் பிரதிபலிக்காதிருப்பது போலவே, மனிதனின் பொறுப்பைப் பற்றிய வேதாகமப் போதனையும் மிக மேன்மையான கருத்தையே பிரதிபலிக்கின்றது. மனிதனுடைய கடமை முழுவதும் மாபெரும் இரு கட்டளைகளில் சுருக்கமாகக் கூறப்படுகின்றது: தேவனிடம் அன்புகூருதல் மற்றும் அயலாரிடம் அன்புகூருதல். இவ்விரண்டு கட்டளைகளின் மேல் தான் வேதாகமத்தின் மற்ற எல்லாக் கட்டளைகளும் தொங்குகின்றன (மத். 22:36-40).*

### தேவனிடம் அன்புகூருதல்

*வேதாகமத்தின்படி ஒருவரின் முதன்மையான அன்பு மற்றும் மேன்மையான ஆர்வம் ஆகியவை மனிதரைப் படைத்தவர் மற்றும் பரலோகத்தின் பிதாவானவரிடம் மையம் கொண்டிருக்கின்றன. தேவனிடம் அன்புகூருதல் என்பது ஒருவர் தம் நண்பர்கள், தம் நாடு மற்றும் தம் சொந்தக் குடும்பம் ஆகியவர்களிடம் கொண்டுள்ள ஆர்வத்திற்கு முந்தியதாக இருக்க வேண்டும். நலமளிப்பது என்ன என்பதற்கு மாறாக, தேவனுக்கு முன்பாகச் சரியானது என்ன என்பதே ஒருவரின் செயல்களைத் தீர்மானிக்கின்றது. வேதாகமத்தை விசுவாசிப்பவர்களில் பலரால் கூட பின்பற்றப்படாத தேவபக்தியின் தரத்தை இது பிரதிநிதித்துவப் படுத்துகின்றது. தேவன் இரண்டாம் இடத்தைப் பெற முடியாது.*

*தம் முழு இருதயத்தோடும் தேவனிடம் அன்புகூருகின்றவர் துன்மார்க்கமான அரசிற்குக் கூடக் கீழ்ப்படிகின்றார். அவர் உபத்திரவத்தில் சந்தோஷப்படுகின்றார்; அவர் தம்மைத்தாமே மனநிறைவுள்ளவராக்கிக் கொண்டு ஒவ்வொரு சூழ்நிலையிலும் நன்றி நிறைந்தவராய் இருக்கின்றார். அவர் தமது எண்ணங்களைச் சுத்தமானவைகளாகவும், தூய்மையாகவும் காத்துக் கொண்டு, தன்னையே வெறுப்பதற்கு விருப்பத்துடன் தம்மைக் கீழ்ப்படுத்துகின்றார்.*

### அயலாரிடம் அன்பு

*தேவனிடத்தில் அன்பு செலுத்துவது வேண்டப்படுகையில், தன் அயலாரிடம் அன்புகூராத ஒருவர், தம்மிடம் காட்டும் அன்பைத் தேவன் வெறுத்து ஒதுக்கின்றார். அயலாரிடத்தில் ஒருவர் காட்டும் அன்பானது*

*உதட்டினால் பேசும் வெறும் வார்த்தைகளைக் காட்டிலும் மிகவும் மேன்மையானதென்று வேதாகமம் பிரதிநிதித்துவப் படுத்துகின்றது. இது பசியோடிருப்பவர்களுக்கு உணவளிப்பதில், துன்பத்திலிருந்து விடுவிப்பதில் மற்றும் திக்கற்றவர்களை ஆதரிப்பதில் மெய்யாக்கப் படுகின்றது. ஒருவர் தம் விரோதிகளைப் பழி வாங்கும் விருப்பத்திற்குப் பதில் அவர்கள் மேல் அன்புகூர வேண்டும் என்று இது அழைக்கின்றது. இது தீமையை நன்மையினாலே வெல்லுகின்றது. அயலாரிடம் அன்பு கூருவதற்குத் தாழ்மையும், தமது சொந்தத் தேவைகளை விட மேலாக மற்றவர்களின் தேவைகளைக் கருதுவதும் இதற்கு அவசியமாகின்றது. சக மனிதர்களிடம் ஒருவரின் நடக்கைக்கான வேதாகமத்தின் ஒழுக்க நெறியானது உண்மையில் ஒரு சிலரால் மட்டுமே பின்பற்றப்படுவதாக மிக மேன்மையானதாயிருக்கின்றது.*

***உண்மையற்ற ஒழுக்க நெறிகள் உள்ளடக்கப்படவில்லை***

*மனிதனுக்கான வேதாகம உபதேசமானது, அதிலும் குறிப்பாகப் புதிய ஏற்பாட்டின் உபதேசமானது, மேன்மையான எல்லாவற்றையும் மிக உயர்வாகப் புகழ்ந்துரைப்பதோடு நின்றுவிடுவதில்லை, ஆனால் புறதெய்வ மார்க்கங்களால் வெகுவாய்ப் பாராட்டப்படக் கூடிய பண்புகள் யாவற்றையும் கவனிக்கத் தக்க வகையில் நீக்கி விடுகின்றது. இவைகளில் உடல் வீரம், நாட்டுப்பற்று மற்றும் நட்பு ஆகியவையும் உள்ளடங்குகின்றன. உடல் வீரத்தைப் பொறுத்தமட்டில், இயேசு பேதுருவிடம், பட்டயத்தை எடுத்தவன் பட்டயத்தாலேயே மடிவான் (மத். 26:52) என்று கூறிப் பட்டயத்தை உறையில் இடும்படிக் கட்டளையிட்டார். பலம் என்பது நன்மை செய்வதில்லை, திருப்பிப் போராடுவதைக் காட்டிலும் நன்மை செய்து பாடநுவிப்பது மிகவும் சிறந்ததாகும். நாட்டுப் பற்றைப் பொறுத்தமட்டில், ஒருவர் தம் நாட்டின் மீது அன்புகூர வேண்டியதே, இருந்தாலும் பரலோகத்தில் உள்ள குடியுரிமையின்மேல் மிகுந்த ஆர்வம் உள்ளவராய் இருக்க வேண்டும். நட்பைப் பொறுத்தமட்டில், ஒருவர் தம் நண்பர்களுக்காக மரிக்க விருப்பமாய் இருந்தாலும், அந்த நண்பர்கள் தேவனுடைய சத்தியத்திற்காக நிலைநிற்காத பொழுது, நட்பைக்காட்டிலும் மேன்மையான முதலிடத்தைச் சத்தியத்திற்குத் தர வேண்டும். தேவைப்பட்டால் நண்பர்களை விட்டு விலகிவருமளவுக்கு ஒருவர் தேவனுக்கும் தேவனுடைய சத்தியத்திற்கும் தம்மை ஒப்புக் கொடுக்க வேண்டும். "ஒரு மனுஷனுக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே" (மத். 10:36).*

*வீரம், நாட்டுப்பற்று மற்றும் நட்பு ஆகியவை சில பகுதிகளில் பெருவிருப்புக் கொள்ள வேண்டிய ஒழுக்க நெறிகளாய் இருக்கின்றன. இருப்பினும், மிக உயர்ந்த ஒழுக்க விதிகளில் இந்தப் பண்புகளும் கூட வரையறைக்குட் படுத்தப்படுகின்றன. ஒழுக்க நெறிகளை மக்கள் மேன்மைப்படுத்தும் பொழுது, தேவன் தம் அரியணையிலிருந்து அகற்றப்பட்டு விடுகின்றார். இம்மூன்று பண்புகளும் (அல்லது மற்ற எந்தப்*

பண்புகளும்) படைத்தவருக்குக் காட்டப்பட வேண்டிய மிக மேன்மையான ஆர்வத்துடன் முரண்படும் பொழுது, அவைகள் ஒழுக்க நெறிகளாய் இருப்பதை விட்டொழித்து, குற்றங்களாகின்றன.

## முடிவுரை

தேவனைப் பற்றி, மனிதனின் இயல்பு மற்றும் மனிதனின் கடமை ஆகியவை பற்றி வேதவசனங்களில் கூறப்பட்டுள்ள இப்படிப்பட்ட மாபெரும் உபதேசங்களைப் போன்றவைகளை உதவியற்ற மனிதர்கள் உண்டாக்கியிருக்கவில்லை. உதவியற்ற மனிதர்கள் இந்த மாபெரும் உபதேசங்களைத் தோற்றுவிக்க முடியாதிருந்தது என்பதற்கு வலுவான ஆதாரம் நிலவுகின்றது. ஆகையால் இந்தப் போதனைகள், மனிதரைக் காட்டிலும் மேலான ஒருவரிடமிருந்து வேதாகமம் தோன்றியது என்பதற்கு உள்ளான நிருபணமாயிருக்கின்றன.

வேதாகம உபதேசங்களின் அறிதிறன் மற்றும் உயர் தரம் ஆகியவை இயேசுவின் நாட்களில் அவரது பிரசங்கங்கள் கொண்டிருந்த அதே செயலாக்கத்தை இன்றைய நாட்களின் மக்கள் மீதும் கொண்டுள்ளன. நாசரேத்தூரில் இருந்து அவரது அயலார்கள் இயேசுவின் ஞானமுள்ள வசனங்களினால் திகைப்படைந்தார்கள். அவர் இவ்வளவு விவேகமும் பிரகாசிப்பும் கொண்டிருந்தது எப்படி என்பதை அவர்கள் புரிந்து கொள்ள முடியாதிருந்தது. பெரும் பீதியில் அவர்கள், ''இவைகள் இவனுக்கு எங்கேயிருந்து வந்தது? ... இவனுக்குக் கொடுக்கப்பட்ட ஞானம் எப்படிப்பட்டது?'' (மாற். 6:2) என்று ஆச்சரியப்பட்டார்கள். அவர்களின் சொந்த ஊரிலிருந்து வந்த இளைஞனே அவர் என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள்; அவரது பெற்றோர், அவரது சகோதரர்கள் மற்றும் அவரது சகோதரிகள் ஆகியோரை அவர்கள் அறிந்திருந்தார்கள். நடைமுறையில் அவரது வாழ்க்கை முழுவதையும் அவர்கள் அறிந்திருந்தார்கள். அவர் பள்ளிக்குச் சென்றிருந்ததில்லை என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். அவர் நன்றாகக் கல்வி கற்றிருந்தாலும் கூட, அவருடைய முப்பது ஆண்டுகளைக் காட்டிலும் இரு மடங்கு வயதுடைய மனிதர்களைக் காட்டிலும் அதிகமான அறிவுத்திறனையும் ஞானத்தையும் அவர் வெளிப்படுத்தினார். அவர்களின் கேள்விகளுக்கு அவர்கள் பதிலைப் பெறாதிருந்தார்கள்.

அது போலவே, இன்றைய நாட்களில் அவிசுவாசியொருவரும் அதே கேள்விக்குப் பதிலைப் பெற்றிருப்பதில்லை: ''இவைகள் இவனுக்கு எங்கேயிருந்து வந்தது? ... இவனுக்குக் கொடுக்கப்பட்ட ஞானம் எப்படிப்பட்டது?'' இயேசுவின் பிறப்புக்கு எட்டு நூற்றாண்டுகளுக்கு முன்னதாகக் கொடுக்கப்பட்ட முன்னுரைப்புக் கூற்றை - ஈசாயின் வம்சத்தில் வரும் ஒருவர், ஞானத்தையும், உணர்வையும், ஆலோசனையையும், பெலனையும், அறிவையும் அருளும் ஆவியைப் பெற்றிருப்பார் (ஏசா. 11:1, 2) என்ற தீர்க்கதரிசனக் கூற்றை - ஏற்றுக் கொள்ளும் எவரும் இயேசுவின் இணையற்ற மொழிதல்களின் மூலம்

*ஆதாரத்தைப் புரிந்து கொள்ள முடியும். மற்றப்படி, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்தது போலவே, அவருடைய ஞானத்தின் காரணம் ஒரு ஆழ்ந்த புதிராகவே இன்றும் இருக்கின்றது.*

*இயேசுவின் சொந்த மொழிதல்கள் மனிதனல்லாத மூல ஆதாரத்திற்குச் சாட்சி கொடுக்கின்றன. உண்மையில் வேதாகமம் முழுவதிலும் உள்ள உபதேசங்கள் மனித குலத்திற்கு அவைகள் தரும் பிரயோஜனங்களில் தனிச் சிறந்தவைகளாய் இருக்கின்றன, அவை ஒரு தெய்வீகத் தொடக்கம் பெற்றுள்ளதைச் சுட்டிக்காட்டுகின்றன. "இவனுக்குக் கொடுக்கப்பட்ட ஞானம் எப்படிப்பட்டது?" என்ற கேள்விக்குப் பதிலானது, வேதாகமத்தை மனிதன் உண்டாக்கிய புத்தகத் தொகுதிக்கு மேலானதல்ல என்று அடையாளமிடுபவரிடமிருந்து வருவதில்லை. இருந்தாலும், வேதாகம போதனைகளின் செயல் வலிமையால் தம் காரண அறிவை வழி நடத்த அனுமதிக்கும் எவரொருவரும் இந்தக் கேள்விக்கு சுலபமான பதிலைப் பெறுகின்றார்: இந்தப் போதனைகள் தேவனிடத்திலிருந்து வந்தன.*